செய்தி வெளியீட்டு எண்–244 நாள்–18.3.2010

## செய்தி வெளியீடு

## சென்னை நதிகள் சீரமைப்பு ஆணையமும், சிங்கப்பூர் கூட்டுறவு நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் இன்று கையெழுத்தானது!

**சென்னையில் கூவம் ஆற்றைச் சீரமைக்கும் நோக்கத்தில் சென்ற 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், அரசு அதிகாரிகளின் குழு சிங்கப்பூர் சென்று அங்குள்ள சிங்கப்பூர் மற்றும் கல்லாங் என்ற ஆறுகளைச் சீரமைத்த விதம் பற்றி அறிந்துவந்தனர். அதன் பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் சிங்கப்பூர் சென்று வந்த ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ‘‘சென்னை நதிகள் ஆணையம்’’ அமைக்கவும், தொழில்நுட்ப ஆலோசனைக்கு சிங்கப்பூர் அரசுடன் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடவும் ஆணை பிறப்பித்தார்.**

**கூவம் சீரமைப்புப் பணிகளின் முதற்கட்டமாக கூவம் ஆறு மற்றும் சென்னையின் பிற நீர்நிலைகளைச் சீரமைக்கும் நோக்கத்தில் தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, சென்னை நீர்நிலைகளின் சீரமைப்புத் திட்டங்களை உருவாக்குதல், ஒருங்கிணைப்பு, நிதி ஆதாரம், மேற்பார்வை முதலியவற்றுக்காக ஏற்படுத்தப்பட்டது. இம்முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கவும், ஆலோசனைகள் வழங்கவும் மாண்புமிகு துணை முதலமைச்சர் தலைமையில், சுற்றுப்புறச் சூழல் அமைச்சர், குடிசை மாற்று வாரிய அமைச்சர்,**

சென்னை மாநகர மேயர் மற்றும் தொடர்புடைய துறைச் செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் உயர் நிலைக்குழு அமைக்கப்பட்டது.

சென்னை நதிகள் சீரமைப்பு ஆணையத்தின் வேண்டுகோளை ஏற்று, சிங்கப்பூர் அரசு அதன் வெளியுறவு, வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகங்களின் கீழ் செயல்படும் அமைப்பான சிங்கப்பூர் கூட்டுறவு நிறுவனத்தை (Singapore Cooperation Enterprise) சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள அனுமதி அளித்தது. சிங்கப்பூர் கூட்டுறவு நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. அல்போன்சஸ் சியா அவர்களின் தலைமையில், அந்த நிறுவனத்தின் இயக்குநர் திரு.காங் ஒய் மன், துணை இயக்குநர் திருமதி.அன்னா நங், பொது மேலாளர் திரு. ராஜீவ் தீட்சித் மற்றும் துணைத் தலைவர் திரு.வினோத் சிங் ஆகிய அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று தற்போது மார்ச் 17 முதல் 19 வரை சென்னை வந்துள்ளது. இக்குழு மார்ச் 17 அன்று கூவம் நதி சீரமைப்பில் ஈடுபட்டுள்ள பல்வேறு துறைகளுடன் கலந்துரையாடல் நடத்தியது. மேலும், இக்குழு அடையாறு பூங்காவிற்கும் வருகை தந்து அங்கு எடுத்துக் கொண்டுள்ள சுற்றுப்புற சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு தனது பாராட்டுகளைத் தெரிவித்தது. தொடர்ந்து, மார்ச் 19 அன்று கூவம் நதியின் பல்வேறு இடங்களைப் பார்வையிட உள்ளது.

இன்று (18.3.2010) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் சிங்கப்பூர் கூட்டுறவு நிறுவனம் மற்றும் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைகளுக்கு இடையே, சிங்கப்பூர் கூட்டுறவு தலைமைச் செயல் அலுவலர் திரு. அல்போன்சா சியா மற்றும் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் உறுப்பினர் செயலர் திரு. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., அவர்களால் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு சென்னை

**நதிகள் சீரமைப்பு குறித்து முழுமை திட்டம் தயாரித்தல், திட்ட மேலாண்மை மற்றும் செயல் அலுவலர்கள், பொறியாளர்கள் திறனை மேம்படுத்துதல், சீரமைப்புப் பணிகள் போன்றவற்றில் சிங்கப்பூர் கூட்டுறவு நிறுவனம் ஆலோசனைகளை வழங்குதல் போன்ற உதவிகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.**

**இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு.கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் திரு.எஸ். இராமசுந்தரம், இ.ஆ.ப., துணை முதலமைச்சர் அவர்களின் முதன்மைச் செயலாளர் திரு.தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் செயலாளர் திரு. நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் திரு.எஸ். கருணாகரன் ஆகியோர் உடனிருந்தனர்.**

**இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு சிங்கப்பூர் கூட்டுறவு நிறுவனம் – சென்னையில் உள்ள நீர்நிலைகளின், குறிப்பாக கூவம் ஆற்றினைச் சீரமைக்கும் பணிகளின் முழுமைத் திட்டம் தயாரித்தல், திட்ட மேலாண்மை மற்றும் பொறியாளர்கள், செயல் அலுவலர்களின் செயல் திறனை மேம்படுத்த பயிற்சிகள் அளித்தல், சீரமைப்புப் பணிகளில் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் ஆகிய உதவிகளை மேற்கொள்ளும்.**

*** * ***

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம்,**

சென்னை–600 009.